ஒதுக்கீட்டுத் தலைப்பு – 130 – உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சு

கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை – 2011 ஆம் ஆண்டு

## 1.1 கணக்காய்வின் நோக்கெல்லை

உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சின் 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக் கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு, இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2013 யூன் மாதத்தில் அமைச்சின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லை, பரப்பு என்பன எனக்குக்கிடைக்கப் பெற்றுள்ள பதவியணியினர் ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்டிருந்தன.

## 1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

ஒதுக்கீட்டுக் கணக்கு இணக்க கூற்று என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல், செயற்படுத்துதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

## 2. கணக்குகள்

### 2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு

#### (அ) மொத்த ஏற்பாடும் செலவும்

அமைச்சிற்காக மேற்கொள்ளப்பட்ட மொத்த தேறிய ஏற்பாடு ரூபா 6,561,223,456 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியளவில் அதில் ரூபா 6,221,104,407 பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க தேறிய சேமிப்பு ரூபா 340,119,049 ஆக இருந்ததுடன் அது மொத்த தேறிய நிதி ஏற்பாட்டில் 5 சதவீதத்தினைக் கொண்டிருந்தது. விபரங்கள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| செலவுகளின் விபரம் | மதிப்பிடப்பட்ட நிதி ஏற்பாடு | தேறிய நிதி ஏற்பாடு | சேமிப்பு | தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | % |
| மீண்டுவருபவை | 172,610,000 | 172,064,000 | 9,283,424 | 5.39 |
| மூலதனம் | 4,360,250,000 | 6,389,159,456 | 330,835,625 | 5.17 |
| மொத்தம் | 4,532,860,000 | 6,561,223,456 | 340,119,049 | |

### 2.2 முற்பணக் கணக்குகள்

#### 2.2.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

**பாராளுமன்றத்தினால் அனுமதிக்கப்பட்ட எல்லைகள்**

13001 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பாக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்ட எல்லைகளும் உள்ளபடியான பெறுமதியும் கீழே தரப்படுகின்றன.

| செலவு | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| உச்ச எல்லை | உள்ளபடியானவை | இழிவு எல்லை | உள்ளபடியானவை | உச்ச எல்லை | உள்ளபடியானவை |
| ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 7,850,000 | 5,660,412 | 3,900,000 | 4,764,514 | 35,000,000 | 24,841,655 |

### 2.3 பொது வைப்புக் கணக்கு

2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அமைச்சின் பொது வைப்புக் கணக்கிலுள்ள மீதிக் கூட்டுத்தொகை ரூபா 20,708,204 ஆக இருந்தது.

### 2.4 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சின் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்க கூற்றில் இங்கே (அ) இலிருந்து (எ) வரையான பொது அவதானிப்புக்கள் மற்றும் கீழே 2.5 இலிருந்து 2.10 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்களைத் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

(அ) ஏடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை

அமைச்சினால் பின்வரும் ஏடுகள் முறையாகவும் நாளதுவரையாகவும் பேணப்பட்டிருக்கவில்லை என்பது தெரிவுப் பரிசோதனையின் படி அவதானிக்கப்பட்டது.

| ஏடுகளின் வகை | உரிய பிரமாணம் | அவதானிப்பு |
|---|---|---|
| நிலையான சொத்துக்கள் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றுநிருபம் | 2009 ஆம் ஆண்டிற்கு முன்னர் பதியப்பட்டிருக்காமை. |
| வாகனப் பதிவேடு | நிதிப்பிரமாணம் 1647 | பெற்றுக்கொள்ளப்பட்ட மற்றும் அகற்றப்பட்ட வாகனங்கள் தொடர்பான பதிவுகள் உள்ளடக்கப்பட்டிருக்காமை. |

(ஆ) பாதீட்டு முரண்

(i) 4 செலவு விடயங்களுக்காக மேற்கொள்ளப்பட்ட ரூபா 47,250,000 தொகையான தேறிய ஏற்பாடு முழுவதும் சேமிக்கப்பட்டிருந்தது.

(ii) 06 செலவு விடயங்களுக்காக மிகையான நிதி ஏற்பாடு செய்யப்பட்டதன் காரணமாக நிதி ஏற்பாட்டினைப் பயன்படுத்தியதன் பின்னர் ரூபா 198,952,963 தொகையான சேமிப்பு அச்செலவு விடயங்களுக்கான தேறிய நிதி ஏற்பாட்டில் 72 சதவீதத்திற்கும் 96 சதவீதத்திற்கும் இடைப்பட்ட வீச்சுடைய சதவீதத்தினைக் கொண்டிருந்தது.

| **செலவு விடயம்** | **செலவு விடயத்தின் விபரம்** | **தேறிய நிதி ஏற்பாடு** | **சேமிப்பு** | **சேமிப்பின் சதவீதம்** |
|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | % |
| 130-1-1-1303 | பராமரிப்புச் செலவு – கட்டிடங்கள் மற்றும் நிர்மாணம் | 100,000 | 93,978 | 94 |
| 130-1-1-2002 | மூலதனச் சொத்துக்களைப் புனரமைத்தல் - இயந்திரங்களும் உபகரணங்களும் | 400,000 | 383,500 | 96 |
| 130-2-3-16-2502(14) | கொழும்பு பெரும்பாக கழிவுநீர் முகாமைத்துவ செயற்திட்டம் | 185,000,000 | 175,045,317 | 95 |
| 130-2-3-20-2504(14) | வட மத்திய மாகாண வீதி அபிவிருத்தி செயற்திட்டம் | 11,000,000 | 8,256,187 | 75 |
| 130-2-3-20-2504(17) | வட மத்திய மாகாண வீதி அபிவிருத்தி செயற்திட்டம் | 750,000 | 709,094 | 95 |
| 130-2-4-10-2502(11) | பண்டுவஸ்னுவர அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் | 20,000,000 | 14,464,887 | 72 |
| | | 217,250,000 | 198,952,963 | |

(iii) அமைச்சின் குறித்த சில செலவு விடயங்களுக்காக குறைநிரப்பு மதிப்பீட்டின் மூலம் நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்ததுடன் 05 செலவு விடயங்களில் அக்குறைநிரப்பு மதிப்பீட்டு நிதி ஏற்பாட்டில் 30 சதவீதத்திலிருந்து 100 சதவீதம் வரையான வீச்சுடைய குறைந்த பயன்பாடு காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

| செலவு விடயம் | குறைநிரப்பு மதிப்பீட்டின் நிதி ஏற்பாட்டு பணம் | பயன்படுத்தப்பட்ட பணம் | சேமிப்பு | சேமிப்பின் சதவீதம் |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | % |
| 130-1-1-1001 | 2,500,000 | 1,753,773 | 746,227 | 30 |
| 130-1-1-1401 | 1,000,000 | 395,747 | 604,253 | 60 |
| 130-2-3-3-2504(17) | 250,000,00 | 212,407,501 | 137,407,501 | 75 |
| 130-2-3-21-2504(14) | 10,000,000 | - | 10,000,000 | 100 |
| 130-2-3-21-2504(17) | 2,000,000 | - | 2,000,000 | 100 |

**(இ) கூட்டிணைந்த திட்டம்**

சகல அமைச்சுச் செயலாளர்கள், மாகாண சபைகளின் பிரதம செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், மாவட்டச் செயலாளர்கள் மற்றும் உள்ளூராட்சி அதிகாரசபைகளின் தலைவர் என்போருக்கு முகவரியிடப்பட்ட 2010 மார்ச் 10 ஆந் திகதிய பீஎப்/ஆர்/2/2/3/5(4) ஆம் இலக்க அரசாங்க நிதி பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் பிரகாரம் 2010 ஆம் ஆண்டிலிருந்து அடுத்துவரும் ஆகக் குறைந்தது 03 ஆண்டுகளுக்காக கூட்டிணைந்த திட்டம் வருட ஆரம்பத்தில் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் அமைச்சினால் அத் திட்டம் 2011 திசெம்பர் 31 ஆந் திகதி வரையும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஈ) வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம்**

2011 ஆம் ஆண்டிற்கு செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும் அமைச்சின் அபிவிருத்திச் செயற்திட்டம் சம்பந்தமான தரவுகளில் நிதிசார் இலக்குகள் மாத்திரம் குறிப்பிடப்பட்டிருந்ததுடன் பௌதீக இலக்குகள் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**(உ) வருடாந்த செயலாற்றல் அறிக்கை**

மேலே பந்தி (இ) இல் குறிப்பிடப்பட்ட பொது நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தில் குறிப்பிடப்பட்ட 2002 செப்தெம்பர் 12 ஆந் திகதிய மற்றும் 2004 பெப்ரவரி 20 ஆந் திகதிய 402 மற்றும் 402(1) ஆம் இலக்க அரச நிதிச் சுற்றுநிருபத்தின் பிரகாரம் நிதி ஆண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் அமைச்சினால் வருடாந்த செயலாற்றல் அறிக்கை தயாரிக்கப்பட்டு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கான பிரதியுடன் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படவேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்கான செயலாற்றல் அறிக்கை 2013 மே 31 ஆந் திகதி வரையும் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஊ) வருடாந்த கொள்வனவுத் திட்டம்**

2006 மார்ச் 24 ஆந் திகதிய 128 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றுநிருபத்தின் பிரகாரம் வருடாந்த கொள்வனவுத் திட்டம் 2011 திசெம்பர் 31 ஆந் திகதி வரையும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**(எ) கட்டுநிதிக் கணக்கு**

நிதிப் பிரமாணம் 371 இன் பிரகாரம் செயற்பாடு பூர்த்தி செய்யப்பட்ட உடன் குறித்த செயற்பாட்டின் உப கட்டுநிதி பூர்த்தி செய்யப்படவேண்டிய போதிலும் செயற்பாடு பூர்த்திசெய்யப்பட்டு 05 மாதங்கள் தாமதத்தின் பின்னர் ரூபா 850,242 தொகையான உப கட்டுநிதி தீர்த்துவைக்கப்பட்டிருந்தது.

## 2.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

**வருடாந்த பொருள் மெய்மையாய்வினை நடாத்துதுல்**

நிதிப் பிரமாணம் 756 மற்றும் 757 இன் பிரகாரம் அமைச்சினால் வருடாந்த பொருள் மெய்மையாய்வு நடாத்தப்பட்டிருந்தும் அமைச்சின் வாகனங்கள் சம்பந்தமாக 2011 ஆம் ஆண்டிற்கான மெய்மையாய்வு நடாத்தப்பட்டிருக்கவில்லை.

## 2.6 இணக்கமின்மை

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மை**

தெரிவுக் கணக்காய்வுச் செவ்வையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றிலுள்ள ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் விபரிக்கப்பட்டு கீழே தரப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | பெறுமதி | இணக்கமின்மை |
|---|---|---|---|
| (அ) | தாபன விதிக்கோவை | | |
| (i) | viii ஆம் அத்தியாயத்தின் 3 ஆவது பிரிவு | 2,773,426 | மேலதிக நேரவேலை செலுத்தக் கூடிய சந்தர்ப்பங்களை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக செய்தவேலை தொடர்பான விபரம் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (ii) | xxiv ஆம் அத்தியாயத்தின் 4.2.3 ஆம் பிரிவு | 446,571 | "இரத்துச் செய்ய முடியாத வாக்குறுதி" கடன்பட்டோரினால் சமர்ப்பிக்கப்படாத 07 கோவைகள் தெரிவுச் செவ்வையின் போது வெளிப்படுத்தப்பட்டன. |
| (ஆ) | சனாதிபதி செயலகத்தின் சுற்றுநிருபம் | | |
| (i) | 2010 மே 14 ஆந் திகதிய CA/1/17/1 ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் 3.1 ஆம் பந்தி | - | பந்திக்கு முரணாக அமைச்சருக்கு மேலதிகமாக 03 வாகனங்கள் ஒதுக்கப்பட்டிருந்தன. |
| (ii) | 2.1 ஆம் பந்தி | 1,603,072 | பந்திக்கு முரணாக இரண்டு சாரதிகள் மற்றும் இரண்டு அலுவலக உதவியாளர்கள் மேலதிகமாக சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தார்கள். உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சு செயலாளரின் கூற்றின் படி, "கௌரவ அமைச்சரினால் தமது தேவைப்பாட்டிற்கு இணங்க இரண்டு சாரதிகள் ஒதுக்கப்பட்டிருந்தும் அமைச்சிற்கான அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரை மிகைக்காத வகையில் சாரதிகள், முகாமைத்துவம் செய்யப்பட்டுள்ளது என தயவாகத் தெரிவிக்கின்றேன்." எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. |

## 2.7 செயலாற்றல்

அமைச்சின் 2011 ஆம் ஆண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டம் மற்றும் செயலாற்றல் தொடர்பான பரிசீலனையின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

### (i) தெஹியோவிட்ட பல்நோக்கு கட்டிடத் தொகுதியினை நிர்மாணித்தல்

இந்த நிர்மாணத்திற்கு 2011 ஆம் ஆண்டிற்காக ரூபா 48 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்ததுடன் ஆண்டின் போது ரூபா 40 மில்லியன் மாத்திரம் செலவு

செய்யப்பட்டிருந்தது. 2010 ஆம் ஆண்டின் திசெம்பர் மாதம் ஆரம்பிக்கப்பட்ட செயற்திட்டத்தை 2012 ஆம் ஆண்டில் பூர்த்திசெய்வதற்கு நிர்ணயிக்கப்பட்டிருந்தது. 2011 திசெம்பர் 22 ஆந் திகதி வரை 40 சதவீத பௌதீக செயலாற்றல் மாத்திரம் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளதாக கோவைகளின் தகவல்களின் பிரகாரம் அவதானிக்கப்பட்ட போதிலும் 2012 மார்ச் மாதம் வரை செய்யப்பட்ட வேலைகளின் பெறுமதி ரூபா 87,565,066 என பொறியியல் செயற்பாடு தொடர்பான மத்திய ஆலோசனைப் பணியம் (CECB) காட்டியிருந்ததுடன் அது ஒப்பந்த தொகையான ரூபா 254,160,231 தொகையில் 34 சதவீத அளவுடையதாகும். இச்செயற்திட்டத்திற்காக மேற்கொள்ளப்பட்ட வேலைகளுக்காக கொடுப்பனவு செய்வதற்கு தாமதம் ஏற்பட்டிருந்ததுடன் திட்டமிடப்பட்ட வகையில் செயல்முன்னேற்றம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. 2012 ஆம் ஆண்டின் இறுதி வரையும் திட்டமிடப்பட்டவாறு வேலைகளைப் பூர்த்திசெய்வதற்கு முடியாதிருந்தது.

**(ii) மந்தநிலையிலுள்ள உள்ளூராட்சி நிறுவனங்களை முன்னேற்றமடையச் செய்தல்**

அமைச்சின் உள்ளூராட்சிப் பிரிவின் மூலம் மந்த நிலையிலுள்ள உள்ளூராட்சி நிறுவனங்களுக்கும் உதவியளித்தல் குறிக்கோளாக இருந்ததுடன் 2011 ஆம் ஆண்டு வரை மந்த நிலையிலுள்ள 103 உள்ளூராட்சி நிறுவனங்கள் இனங்காணப்பட்டிருந்தன. இந்நிறுவனங்களில் 15 நிறுவனங்களுக்காக மாத்திரம் உடைந்த வாகனங்களை பழுதுபார்ப்பதற்காக 2011 ஆம் ஆண்டின் போது ரூபா 13,791,802 தொகை வழங்கப்பட்டிருந்தது.

வாகன பழுதுபார்த்தல் செலவுகளை பரீட்சித்த போது சில வாகனங்கள் மிகவும் பழைமையானதாக இருந்த போதிலும் அவற்றின் பெறுமதியை மிகைத்த பணம் பழுதுபார்ப்பதற்காக செலவு செய்யப்பட்டிருந்ததுடன் உள்நாட்டு முகவர் நிறுவனங்களில் பழுதுபார்தல் இடம்பெற்றிருந்தது.

செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் வாகன பழுதுபார்ப்பிற்காக உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு ரூபா 1 மில்லியனான உச்ச மதிப்பீட்டு பணத்திற்காக நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டிருந்தும் ரூபா 1 மில்லியனை மிகைத்த 6 பழுதுபார்த்தல் செலவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

குறைந்த வருமானம் பெறும் உள்ளூராட்சி நிறுவனங்களை முன்னேற்றுவதற்கு உதவி வழங்குவதின் கீழ் இனங்காணப்பட்ட 103 நிறுவனங்களில் 14 நிறுவனங்களுக்காக 2011 ஆம் ஆண்டில் ரூபா 32,193,055 தொகையான உதவி ஒவ்வொரு நிறுவனங்களின் கட்டிடங்களை நிர்மாணிப்பதற்கும் உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்குமாக வழங்கப்பட்டிருந்த போதிலும் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டவாறு

வருமானம் உழைக்கும் வழிகளை மேம்படுத்தும் செயற்திட்டங்களை அமுல்படுத்துவதற்காக எதுவித உதவியும் வழங்கப்பட்டிருக்கவில்லை.

**2.8 சர்ச்சைக்குரிய தன்மையான கொடுக்கல்வாங்கல்கள்**

அமைச்சினால் மேற்கொள்ள்பபட்ட குறித்த சில கொடுக்கல்வாங்கல்கள் சர்ச்சைக்குரிய தன்மையானவையாக இருந்தன. தெரிவுச் செவ்வையின் போது அவ்வாறு வெளிப்படுத்தப்பட்ட சில கொடுக்கல்வாங்கள் தொடர்பான விபரம் கீழே தரப்படுகின்றன.

(அ) அமைச்சு பதவியணியினருக்காக அரசாங்க சேவையிலிருந்தது அல்லது தற்காலிகமாக ஆட்சேர்த்துக்கொள்ளாது கூட்டுத்தாபனங்கள் மற்றும் சபைகளிடமிருந்து சேர்த்துக்கொண்டதன் காரணமாக மீளாய்வாண்டின் போது ரூபா 1,336,143 தொகை சம்பளமாக மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) நீர் வளங்கள் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் ஊழியர்களுக்காக செலுத்தப்படுகின்ற மிகையூதிபம் விடுமுறை தினப்படியாக ரூபா 255,470 தொகை அமைச்சிடமிருந்து மீளளிப்புச் செய்யப்பட்டிருக்கவில்லை.

**2.9 சிக்கனமற்ற கொடுக்கல்வாங்கல்கள்**

தெரிவுச் செவ்வையின் போது வெளிப்படுத்தப்பட்ட சிக்கனமின்றி மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பான விபரம் கீழே தரப்படுகின்றன.

(அ) அமைச்சரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நீர், மின்சாரம் என்பவற்றிற்காக மீளாய்வாண்டின் போது மாத்திரம் முறையே ரூபா 192,207 தொகையும் ரூபா 916,695 தொகையும் கொடுப்பனவு செய்யவேண்டியிருந்தது.

(ஆ) பட்டியல்களை முறையாக கொடுப்பனவு செய்யாததன் காரணமாக நீர் பட்டியல்களுக்காக ரூபா 17,584 தொகையான தாமதக் கட்டணங்களும் மின்சாரபட்டியல்களுக்காக ரூபா 2,939 தொகையான வட்டியும் செலுத்த வேண்டியிருந்தது.

**2.10 மனித வளங்கள் முகாமைத்துவம்**

**அங்கீகரிக்கப்பட்ட பதவயணியினரும் வெற்றிடங்களும்**

2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான் பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| | பதவியினர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 27 | 19 | 08 |
| (ii) | மூன்றாம் நிலை | 04 | 02 | 02 |
| (iii) | இரண்டாம் நிலை | 130 | 82 | 48 |
| (iv) | ஆரம்ப நிலை | 54 | 39 | 15 |
| (v) | ஏனையவை (அமையம்/ தற்காலிகம்/ ஒப்பந்த அடிப்படை) | - | 11 | - |
| | மொத்தம் | 215 | 153 | 73 |